**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.23/2024** **நாள் : 06.03.2024**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (06.03.2024) "நீங்கள் நலமா" திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் பொதுமக்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அரசின் திட்டங்களின் பயன்கள் குறித்து கேட்டறிந்தார்</u>**

இன்று (06.03.2024) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் **"நீங்கள் நலமா"** திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், சிந்தாதிரிப்பேட்டையில், சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து கேட்டறிந்தார்.

சென்னை புழுதிவாக்கத்தைச் சேர்ந்த திரு.சார்லஸ், தியாகராயநகரைச் சேர்ந்த நடராஜன், திருவொற்றியூரைச் சேர்ந்த திருமதி.ராணி, ரெட்டேரியைச் சேர்ந்த திருமதி.புவனேஸ்வரி, அம்பத்தூரைச் சேர்ந்த திரு.பிரபாகர் உள்பட 10 நபர்கள் குடிநீர்/கழிவுநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பித்திருந்த நிலையில், அவர்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டபொழுது உரிய காலத்திற்குள் இணைப்புகள் வழங்கப்பட்டதாக தெரிவித்தனர். பின்னர், திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திருமதி. மைதிலி அவர்கள் சாலையோர வியாபாரிகளுக்கான

கடனுதவி உடனடியாக தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

மேலும், தாம்பரம் மாநகராட்சியைச் சார்ந்த திரு.இ.முத்து, கட்டிட அனுமதிக்கு விண்ணப்பித்திருந்த நிலையில் உடனடியாக கட்டிட அனுமதி வழங்கப்பட்டதாகவும், கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூரைச் சார்ந்த திரு.சுந்தர்ராஜன், நவீன மின் மயானம் அமைப்பதற்கு விண்ணப்பித்திருந்ததன் அடிப்படையில் உடனடியாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (வருவாய் மற்றும் நிதி), திருமதி.ஆர்.லலிதா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.எஸ். சிவராசு, இ.ஆ.ப. மற்றும் செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப. மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater